


வேலூர் மாவட்டம் குடியாத்தம் பழைய பேருந்து நிலையம் அருகில் நகர கழக செயலாளர் எஸ்.சவுந்தர் ராஜன்தலைமையில் நடந்த கண்டன பொதுக் கூட்டத்தில் கழக பொதுச் செயலாளர், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் பேசினார். அருகில் மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ., குடியாத்தம் சட்ட மன்ற உறுப்பினர் அமலுவிஜயன், ஒன்றிய குழு தலைவர் என்.இ.சத்யானந்தம், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் க.ராஜமார்த்தாண்டன், துணை அமைப்பாளர் அர்ச்சனா நவீன் சங்கர், ஒன்றிய கழக செயலாளர்கள் கள்ளூர்ரவி, ஜனார்த்தனன், எம்.டேவிட், மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் ஜெயந்தி பத்மநாபன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. சார்பில் ஆற்காட்டில் நடைபெற்ற ஒன்றிய அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன பொதுக்கூட்டம் அமைச்சர் இராணிப்பேட்டை ஆர். காந்தி தலைமையில் நடைபெற்றது. இதில் திருவண்ணாமலை மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் எ.வ.வேலு கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். உடன் சுற்றுச்சூழல் அணி மாநில துணைச் செயலாளர் ஆர்.வினோத் காந்தி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜே.எல்.ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., தலைமைக் கழக பேச்சாளர் பசும்பொன், ரவிச்சந்திரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

## இந்தித் திணிப்பு – நிதிப் பகிர்வில் பாரபட்சம் – தொகுதி மறுசீரமைப்பில் அநீதி

## ஒன்றிய அரசைக் கண்டித்து தொகுதிதோறும் பொதுக்கூட்டம்!

### கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், புதிய கல்விக்கொள்கை மூலம் இந்தியைத் திணிக்கும், நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாடு என்ற பெயரை முற்றிலுமாக புறக்கணித்து, நிதிப் பகிர்விலும் பாரபட்சம் காட்டும், தொகுதி மறுசீரமைப்பில் தமிழ்நாட்டை வஞ்சித்து, அநீதி இழைக்கும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையில், சட்டமன்றத் தொகுதிதோறும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் முதன்மைப் பேச்சாளர் ஒருவர், இளம் பேச்சாளர் ஒருவர் என தொகுதிக்கு இரண்டு பேர் பேசவுள்ளனர். மாநில உரிமைகளுக்கு எதிராகச் செயல்படும் ஒன்றிய அரசைக் கண்டித்தும், 72–வது பிறந்தநாள் காணும் மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் குறித்தும், எளிய மக்களுக்குப் புரியும் வகையில், விளக்கிப் பேசுவார்கள்.

மக்களுக்கு விழிப்பு உணர்வூட்டும் வகையில், அன்பகத்தில் தயாரிக்கப்பட்டுள்ள துண்டறிக்கையை, தொகுதி மக்களுக்கு வீடு வீடாகச் சென்று விநியோகித்து, அவர்களை இக்கூட்டத்தில் பங்கேற்க செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ் மக்களின் உரிமைக்குக் குரல் எழுப்பிடும் வகையிலும், உரிமையைத் தர மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையிலும், இந்தப் பொதுக்கூட்டங்களை எழுச்சியுடன் நடத்துமாறு இளைஞர் அணி நிர்வாகிகள் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

| வ. எண் | நாள் | கழக மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 14.03.2025 | பெரம்பலூர் | குன்னம் | குன்னம் பேருந்து நிலையம் | வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, ராமமூர்த்தி |
| 2 | 14.03.2025 | தஞ்சாவூர் தெற்கு | பேராவூரணி | திருச்சிற்றம்பலம் கடைவீதி, பேராவூரணி | வே.மதிமாறன், வியானி விஷ்வா |
| 3 | 14.03.2025 | விழுப்புரம் வடக்கு | மயிலம் | மயிலம் | ராஜகம்பீரன் அப்பாஸ், அப்துல் வஹாப் அதாயி |
| 4 | 14.03.2025 | விருதுநகர் வடக்கு | சிவகாசி மாநகரம் | சி.ரா.அரசு மேல்நிலைப்பள்ளி எதிரில், திருத்தங்கல் | **கம்பம் செல்வேந்திரன்,** செ.முகம்மது அன்ஸார் |
| 5 | 15/03/2025 | சென்னை வடகிழக்கு | திருவொற்றியூர் | பெரியார் நகர், சென்னை –19 | வழக்கறிஞர் ராஜீவ் காந்தி, செல்வமணி |
| 6 | 15.03.2025 | சென்னை தெற்கு | சோழிங்கநல்லூர் | நஞ்சுண்டார் சாலை, ஈஞ்சம்பாக்கம் கடற்கரை, மீனவர் பகுதி | மருத்துவர் யாழினி, க.ஹேமநாதன் |
| 7 | 15.03.2025 | நாமக்கல் கிழக்கு | இராசிபுரம் | பழைய பேருந்து நிலையம், இராசிபுரம் | வழக்கறிஞர் சே.மெ.மதிவதனி, ம.மோகநிதி |
| 8 | 15.03.2025 | ஈரோடு தெற்கு | மொடக்குறிச்சி | நால்ரோடு சந்திப்பு, மொடக்குறிச்சி | **முனைவர் இரா.தி.சபாபதி மோகன்,** மு.கௌரிமனோகரி |
| 9 | 15.03.2025 | புதுக்கோட்டை தெற்கு | ஆலங்குடி | காந்தி பூங்கா அருகில், ஆலங்குடி. | வே.மதிமாறன், இரா.பிரீத்தி |
| 10 | 15.03.2025 | திருவள்ளூர் மேற்கு | திருவள்ளூர் | இரயில் நிலையம் | மில்டன், க.ரா.சந்தியா |
| 11 | 15.03.2025 | இராணிப்பேட்டை | இராணிப்பேட்டை | அண்ணா சிலை அருகில், ஆம்மூர் பேரூர் | துரை.சம்பத், வி.ஜாஸ்மின் சுவேதா |
| 12 | 15.03.2025 | நீலகிரி | உதகை | ஏ.டி.சி.சுதந்திர திடல் முன்பு, உதகை | ராஜகம்பீரன் அப்பாஸ், தஸ்லீமா நஸ்ரின் |
| 13 | 15.03.2025 | மயிலாடுதுறை | மயிலாடுதுறை | விஜயா திரையரங்கம் அருகில், மயிலாடுதுறை | இந்திரகுமார் தேரடி, சூர்யா |
| 14 | 15.03.2025 | விருதுநகர் வடக்கு | திருச்சுழி | கலைஞர் திடல், காரியாபட்டி | **திருச்சி சிவா எம்.பி.,** ஹ.ஹம்மத் நிஸ்ரின் |
| 15 | 15.03.2025 | ஈரோடு வடக்கு | அந்தியூர் | குளத்துக்கடை பேருந்து நிலையம், கூகலூர் | தி.செந்தில்வேல், செ.நந்தகோபால் |

அன்பகம், சென்னை – 18.

நாள் : 09–03–2025.

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**

செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி